# தமிழர் பண்பாட்டு ஆய்வுகள்

(13ஆவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க மாநாட்டுக்
கட்டுரைகளில் சில)

பதிப்பாசிரியர்
முனைவர் **பாஞ். இராமலிங்கம்**

PUDU BOOKS

**புதுச்சேரி கூட்டுறவுப் புத்தகச் சங்கம்**
புதுச்சேரி

Publication serial No. 109/2018

| | |
|---|---|
| Title | : Thamizhar panpattu Aivugal |
| Edition | : First Edition, February 2018 |
| Editor | : Panch Ramalingam. |
| Pages | : 264 |
| Printed at | : Tirumalai offeset printers<br>Chennai |
| Published by | : Puducherry Co-op. Book Society<br># 17, 14th Street, Krishna Nagar,<br>Puducherry - 605 008 |

ISBN : 978-81-933581-8-4

| | |
|---|---|
| Price | : ₹. 300/- |
| Layout | : Magizham Graphics, Puducherry. |


© All rights reserved. No part of this book may be reproduced or retrieved or photocopied in any form excepting for the purpose of reference or research without prior permission of the editor.

# 18. தமிழர் வாழ்வியலில் சோதிட நம்பிக்கைகள்

கலாநிதி பு.க.ராஜசிறிகாந்தன்
விரிவுரையாளர், மானிடவியல் சமூகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
srikanthan80@gmail. com

## அறிமுகம்

சோதிடம் என்பது உலகப் பண்பாடுகளில் புராதன கலை வடிவங்களில் ஒன்று. கைத்தொழில் மயமான இன்றைய உலகில் சோதிடம் அதிகளவான மக்களினைக் கவர்ந்துள்ளது எனப் பௌவர் குறிப்பிடுகின்றார் (Bauer, Martin and John Durant1997: 56). உலகில் பல மில்லியன் கணக்கான மக்களால் ஜாதகம் கணிக்கப்படுகின்றது. மேலும் சோதிடம் என்பது குறைந்த பட்சம் இரண்டு விடயங்களின் அடிப்படையில் நவீன விஞ்ஞானத்தின் தாயின் தாய் (grandmother" of modern science) ஆகக் கருதப்படுகின்றது. ஒன்று சோதிடம் பிரபஞ்சத்தில் ஒழுங்குபடுத்துதலுடன் தொடர்புறுவதும் மற்றையது இவ் ஒழுங்கு படுத்தலை எண்ணியல் ரீதியாகக் கையாள்வதற்கு முயலுகின்றமையும் ஆகும் (மேலது: 57). எனினும் சோதிடம் தொடர்பான உலகளாவிய விமர்சனங்களும் உண்டு (விரிவு: Kelly, Ivan W. 1997). இந்நிலையில் இவ்வாய்வானது யாழ்ப்பாணத்தின் மக்கள் வாழ்வியலில் சோதிட நம்பிக்கைகள் தொடர்பாக மானிடவியல் நோக்கில் ஆராய்கின்றது.

சோதிடம் பார்க்கும் மரபு தமிழர் வாழ்வியலில் பழமையானது. சங்க இலக்கியங்களில் இதற்கான சான்றாதாரங்கள் உண்டு. சோதிடம் என்பது மக்களுடைய சமூக நடத்தை முறைகள், சமயம்சார் சடங்குகள் என்பவற்றினை ஒழுங்கமைப்புச் செய்கின்ற வகையில் சூரியன், சந்திரன், கோள்கள், நட்சத்திரங்கள் போன்ற வானியல் விண் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து எதிர்வு கூறுகின்ற ஒரு அறிவியல் பிரிவு எனலாம். இதனைப் போலி விஞ்ஞானம் என்றும் சொல்வோரும் உண்டு. எனினும் மக்களுடைய அன்றாட வாழ்விலிருந்து சோதிடம் சார்ந்த நம்பிக்கைகள், நடத்தைமுறைகளைப் பிரிந்துணரமுடியாத நிலையில் இவ்வாய்வானது தமிழர் வாழ்வியலில் சோதிட நம்பிக்கைகள் எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஓர் இனவரைவியல் ஆய்வாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

## சோதிடம் பற்றிய அறிமுகம்

சோதிடத்தினை உயர்குடிக்குரிய விஞ்ஞானம் என்றோ அல்லது கலைமரபு என்றோ வரையறை செய்வோர் மத்தியில் இதனை ஒரு போலி அறிவியல் என்றும் மாயைத் தோற்றம் என்றும் கூறுவரும் உளர். கிருட்டினமூர்த்தி என்பவர் சோதிடத்தினைத் தெய்வீக விஞ்ஞானம் என்பார். அதாவது இயற்கையினை முதன்மைப் படுத்துவதன் வழியாக தெய்வீகத் திட்டத்தினை அறிந்துகொள்வதற்குரிய தெய்வீக விஞ்ஞானம் சோதிடம் என்பார் (1989:1). வேதத்திற்கு ஆறு அங்கங்கள் உண்டு. அவற்றில் சோதிடமும் முதன்மையானது. மக்களுக்கு இது காலநியதிகளையும் வாழ்வியல் நியதிகளையும் காட்டித் துனபங்களிலிருந்து விடுபட நல்வழி காட்டுகின்றது. இதனால் இதனை வேதத்தின் கண் என்பார். இச் சோதிடம் கணிதம், ஜாதகம், சங்கிதை எனும் மூன்று வகைப்படும். கணிதம் காலநியதியுடனும் ஜாதகம் மக்கள் பிறப்புடனும் சங்கிதை முகூர்த்தம், ஆரூடம் ஆகியவற்றுடனும் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றது (இரகுநாதையர்: xii).

சோதிடம் என்பது ஆங்கிலத்தில் ‘Astrology’ என்பதற்கான தமிழ்வடிவமாகும். ‘Astrology’ என்பது astron மற்றும் logy/logos ஆகிய இரண்டு பிரதான கிரேக்கச் சொற்களின் உருவாக்கமாகும். Astron என்பது விண்மீன்கள்/நட்சத்திரங்களையும் Logy/logos என்பது இயல், ஆராய்ச்சி எனவும் பொருள்கொள்ளப்படுகின்றது. அந்தவகையில் Astrology என்பது விண்மீன்கள் பற்றிய ஆராய்ச்சி எனலாம். எனினும் இது Astronomy இயிலிருந்து வேறுபட்டது (LEWIS: 2003: xiii). தமிழ் மரபில் சோதிடத்தினைச் ‘சாத்திரம்’ என்று சொல்லும் வழக்கம் உண்டு. சாத்திரம் சொல்லுதல் என்பது வேறுபட்ட அடிப்படைகளில் நிகழப்பெறுகின்றது. அவற்றின் அடிப்படையில் சாத்திரங்களும் வேறுபட்ட பெயர்களில் அழைக்கப்படுகின்றது. அந்தவகையில் கைரேகை சாஸ்திரம், கிளி சோதிடம், சோழி உருட்டிச் சொல்லும் சாத்திரம், நினைத்த காரியம் சொல்லும் சாஸ்திரம், நாடி சோதிடம் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

எகிப்து, கிரேக்கம், சுமேரியா போன்ற புராதன நாகரிகங்களில் சோதிடம் என்பது முதன்மையான பண்பாட்டியல் கூறாக இருந்துள்ளது. குறிப்பாக மக்களுடைய விவசாயச் செயன்முறைகளில் வானியல் மாற்றங்களை எதிர்வு கூறுதலுக்குச் சோதிடவியல் சார்ந்த நம்பிக்கைகள் பெரிதும் பயன்பட்டன. அதாவது விவசாயச் செயன்முறைகளைத்

தொடங்குவதற்கு முன்னர்ச் செய்யப்படும் சடங்குகளைக் கணிக்க சோதிடவியல் சார்ந்த நம்பிக்கைகள் அவசியமானதாகக் காணப்பட்டது. இச் சடங்குகள் பருவ மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டவை. எடுத்துக்காட்டாக இன்றும் எம் மக்களிடையே நவராத்திரி, தைப்பொங்கல் போன்றன மக்களுடைய விவசாயம் சார்ந்த நடைமுறைகளுடன் தொடர்புடைய சடங்குகளாக இருக்கின்றன. நவராத்திரியில் கும்பம் வைத்தல் என்பதும் நவதானியம் விதைத்தல் என்பதும் விவசாய உற்பத்திக்கான தொடக்கநிலைச் செயற்பாட்டினைக் குறியீட்டாக்கம் செய்யும் வகையில் அமைகின்றன. இவ்வாறே தைப்பொங்கல் நெல் அறுவடையின் பின்னரான ஒன்றாகக் காணப்படுகின்றது. நவராத்திரி மிகவும் தெய்வீகத் தன்மையுடன் இணைந்து காணப்படுகின்ற போது தைப்பொங்கல் மிகவும் சமூகமயப்பட்ட சடங்காக அமைவதினைக் காணலாம். காலப்போக்கில் இவை மக்களுடைய நாளாந்த, விசேட காலச் சமூக நடத்தைகள் பற்றிய விடயங்களைத் திட்டமிடவும் இவை பயன்பட்டுள்ளன.

சோதிடம் என்பது சமயம், தத்துவம் மற்றும் நாளாந்த வாழ்வியல் நடைமுறைகள் ஆகியவற்றுடன் மிக நெருங்கிய தொடர்பினை உடையது. பௌத்தர்களிடையேயும் சோதிடம் சார்ந்த நம்பிக்கை இலங்கையில் காணப்படுகின்றது. இன்றும் சில நாடுகளில் சோதிடம் தொடர்பான பாடத்திட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இலங்கையில் பாமரமக்கள் முதல் கொண்டு அரசியல்வாதிகள் வரையாக அனைத்து தரப்பினரும் ஏதோ ஒருவகையில் சோதிடம் தொடர்பான நம்பிக்கையினைக் கொண்டிருப்பதுடன் அதன் பயன்பாட்டினைத் தங்கள் வாழ்வியல் நடைமுறைகளுடனும் இணைத்துக் கொண்டுள்ளமையினைக் கடந்த சில ஆண்டுகளாக அவதானிக்க முடிகின்றது.

## யாழ்ப்பாணத்தில் சோதிட மரபு

இலங்கையில் புராதன இராசதானிகளில் ஒன்றாக நல்லூர் இராச்சியம் காணப்படுகின்றது. ஐரோப்பியர் இலங்கைக்கு வருவதற்கு முன்னைய காலத்தில் இலங்கையில் நிலவிய பிரதான அரசாட்சி மரபுகளில் ஒன்றாக நல்லூரைத் தலைநகராக் கொண்ட யாழ்ப்பாண இராச்சியம் நிலவியுள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாண சோதிட பாரம்பரியத்தின் தொன்மையினை ஈழத்தில் இயற்றப்பட்ட சோதிடவியல் நூல்களான சரசோதிமாலை, செகராசசேகரமாலை போன்றவற்றின்

வழியே அறியமுடிகின்றது. எடுத்துக்காட்டாகச் செகராசசேகரமாலையில் ஒன்பது படலங்கள் உண்டு. இவற்றில் வாழ்வியல் விடயங்களில் சோதிடம் சார்ந்த விடயங்களின் முக்கியத்துவம் விவரிக்கப்படுகின்றன. செகராசசேகரமாலையில் மணவினைப் படலத்தினை நோக்கின் அதில் பொருத்தம், விவாக முகூர்த்தம் தொடர்பான விடயங்களைக் காணலாம்.

யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் தோன்றிய சோதிடவியல் நூல்கள் மருத்துவ நூல்களுடன் இணைந்த நிலையில் வளர்ச்சி பெற்றுள்ளன. உண்மையில் சித்தமருத்துவம் ஆயுர்வேதம் மருத்துவம் போன்ற சுதேச பண்பாட்டு மருத்துவமரபுகளில் சோதிட அறிவு அவசியமான ஒன்றாக ஆரம்பக் காலங்களில் இருந்துள்ளமை யினை இங்குக் கவனிக்கவேண்டும். ஏனெனில் மூலிகைகள், கனிமங்கள் தத்தமது செயற்திறன் ஆற்றலைக் காலவேறுபாட்டில் மாற்றிக் கொள்ளும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் சோதிட வாழ்வியல் தொடர்பான சமூக மானிடவியல் நோக்கிலான ஆய்வுகள் மிகவும் குறைவு. அவற்றுள் பேரின்பநாயகம் என்பவருடைய கன்ம அரங்கு (The Karmic Theater: Self, Society and Astrology in Jaffna 1982) எனும் நூலானது முதன்மையானது. இந்நூலில் யாழ்ப்பாணத்தில் நிலவும் சோதிடப் பாரம்பரியத்தினைச் சமய, சமூகநிலை நோக்கினடியாக விளக்கி யுள்ளமை இங்குக் கவனிக்கத்தக்கது.

## மக்கள் வாழ்வியலில் சோதிடம்

மக்களுடைய வாழ்வியல் நடைமுறைகளுக்கும் சோதிட நம்பிக்கைக்கும் இடையிலான தொடர்புநிலை பற்றிய இனவரைவியல் ஆய்வாக இவ்வாய்வு அமைகின்றது. இனவரைவியல் என்பது மக்களுடைய வாழ்வியல் தொடர்பான ஒரு விவரிப்பு என எளிமையாக வரையறை செய்யலாம். இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது சமூகத்தைப் பற்றிய வரைவு எனும் பொருளைத் தருகின்றது (பக்தவத்சல பாரதி 2014: 7). பண்பியல் சார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வில் முதன்மையான தகவலாளிகளுடனான நேர்காணல்கள் முக்கியமானது. குறிப்பாகச் சோதிடர்கள், கோயில் பூசகர்கள் போன்றவர்களுடனான நேர்காணல்களும், மக்களுடனான கலந்துரையாடலும் முதன்மையான தரவு மூலங்களாகும். இதனைவிட

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் சோதிட பஞ்சாங்க நூல்களான திருக்கணித, வாக்கிய பஞ்சாங்கங்களும் ஆய்வில் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**பஞ்சாங்கம் பார்த்தல்**

பஞ்சாங்கம் என்பது நியமமான இந்து நடைமுறைகளைத் தரும் ஓர் ஆவணமாகும் (சிவத்தம்பி 2000: 140) யாழ்ப்பாணத்தில் வாக்கிய பஞ்சாங்கம் மற்றும் திருக்கணித பஞ்சாங்கம் என இரண்டு பிரதான பஞ்சாங்கள் பாவனையிலுண்டு. அதிகமான இந்துக் கோயில்களும் மக்களும் வாக்கிய பஞ்சாங்கத்தினையே பின்பற்றுகின்றனர். இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் பஞ்சாங்கம் வாசித்தல் என்பது முக்கியமான நிகழ்வாகும். அதாவது சித்திரைப் புதுவருடப்பிறப்பு அன்று பஞ்சாங்கத்தினைப் படித்தல் என்பது கோயில்களில் வழமையாகும். மேலும் மக்கள் பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ளவற்றை அடிப்படையாகக் கொண்டே தங்களுடைய புதுவருட அனுட்டானங்களை மேற்கொள் கின்றனர். குறிப்பாகத் தலைகுளித்தல், கைவிசேடம் மேற்கொள்ளல், மருத்துநீர் தேய்த்தல், புத்தாடை அணிதல் போன்றவற்றினை மேற்கொள்கின்ற வழக்கம் காணப்படுகின்றது. சிங்கள மக்களிடை யேயும் இவ்வகையான நம்பிக்கைகள் காணப்படுகின்றமை கவனத்திற்குரியது. அவர்கள் எண்ணை வைத்தல், அடுப்பு மூட்டுதல் போன்றவற்றுக்கும் நல்ல நேரம் பார்க்கும் வழக்கம் உண்டு. இதனைவிட பல்லிவிழுதல், கனவுக்கான பலன் அறிதல், சகுனம் பார்த்தல் போன்றவற்றுக்கும் பஞ்சாங்கம் பார்க்கும் வழக்கம் ஆரம்பக் காலங்களில் இருந்தாலும் இன்று அவை இன்று வழக்கிழந்துள்ளன. எனினும் கனவு, பல்லிவிழுதல் தொடர்பான நம்பிக்கைகள் மக்களிடையே தொடர்ந்து நிலவுகின்றமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

**ஜாதகம் கணித்தல்**

ஜாதகம் என்பது சோதிடத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒன்று. இது ஒருவர் பிறந்த நேரத்தில் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு கேது ஆகிய 9 கிரகங்களின் நிலைகளை 12 கட்டங்களுக்கு உள்ளடக்கி அமைக்கப்படும் ஒன்று. ஒவ்வொரு கட்டமும் 'வீடு' என்ற சொல்லால் குறிக்கப்படும். 12 வீடுகளும் பன்னிரண்டு இராசிகள் என்பர். ஒவ்வொரு ராசிக்கும் ராகு, கேது தவிர்ந்த ஏனைய 7 கிரகங்கள் அதிபதியாக இருப்பர். இதனை விட

ஒவ்வொரு கிரகங்களும் ஆட்சி, உச்சம், நட்பு, பகை, நீசம் போன்ற இயல்புகளைக் கொண்டது. இவ்வாறு ஒருவர் பிறந்த நேரத்தில் கிரகங்களின் நிலையை அடிப்படையாக் கொண்டு உருவாக்கப்படும் ஜாதகத்தினைச் 'சாதகம்', 'குறிப்பு'எனவும் குறிப்பிடுவார்கள். ஆரம்ப காலங்களில் ஒருவருடைய ஜாதகம் என்பது அவருடைய பிறப்புச் சான்றிதழுக்கு இணையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்களும் இதனை அவ்வாறே பாதுகாத்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் ஜாதகம் எழுதல் என்பது பொதுவாகவே இந்துக் குடும்பங்களின் வழக்கம். எனினும் கிறிஸ்தவ மக்களிடையேயும் இவ்வழக்கம் உண்டு. பொதுவாகப் பிள்ளை பிறந்து 31 ஆம் நாளுக்குப் பின்னரே ஜாதகம் எழுதுவார்கள். எனினும் அதற்கு முன்னர்ப் பிள்ளை பிறந்த நட்சத்திரத்தினை அறிந்துகொள்வார்கள். இதனைக் கள ஆய்வின் போது கோயில் பூசகர் ஒருவர் 'பிள்ளை பிறந்தவுடன் அது பிறந்த நேரத்தைக் கொண்டு வருவார்கள் எங்களிடம் பிள்ளை பிறந்த நட்சத்திரம் என்ன? என்று அறிவதற்கு'என்று கூறியிருந்தமை இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

ஆரம்பக் காலங்களில் பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கும் போது முதலில் தங்களுடைய முன்னோர்களுடைய (பாட்டன், முப்பாட்டன்) பெயர்களையே வைத்தனர், சற்றுக் கால வேறுபாட்டில் கடவுள்களின் (முருகன், நாகலட்சுமி) பெயர்களை வைத்தனர். ஆனால் இன்று பஞ்சாங்கத்தில் பிள்ளையின் நட்சத்திரத்திற்கு பொருத்துமான எழுத்துக்களில்தான் பெயர்வைக்க வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர். ஆய்வுக் கலந்துரையாடலின்போது தந்தை ஒருவர் (ஆசிரியர் வயது 35) தன்னுடைய மகளிற்கு 'லின்சியா' என்று பெயர் வைத்தாகவும் அவருடைய மகளின் நட்சத்திரத்திற்கு 'லி'வில் தொடங்கும் பெயர்தான் வைக்க வேண்டும் என்று தான் விரும்பியதாகவும் குறிப்பிட்டார். இது மக்களின் யாதார்த்த வாழ்வில் சோதிட நம்பிக்கையின் ஆழமான ஆரம்பத்தினை எமக்கு காட்டுகின்றது. மேலும் இத்துடன் எண்சோதிடமும் சேர்ந்து பெயருக்குப் பொருத்தமான எண்ணில் பெயர்வைக்கும் வழக்கம் யாழ்ப்பாணத்தில் அண்மைக் காலமாக அதிரித்துவருகின்றமையும் கவனத்திற்குரியது.

### வாழ்க்கைவட்டச் சடங்குகளை நெறிப்படுத்தல்

மானிடவியல் அறிஞர் வான் கென்னப்ப மக்களின் வாழ்வியல் சடங்குகளை ஆராய்ந்து 'வாழ்க்கை வட்டச் சடங்குகள்' எனும் நூலாக

எழுதியுள்ளார் (பக்தவத்சல பாரதி 2002: 194). அதில் அவர்கள் மக்களுடைய வாழ்வியல் மாற்றங்கள் என்பவை சடங்குகளின் வழியே அடையப் பெறுகின்றன எனும் கருத்தினை விளக்கியுள்ளார். ஒவ்வொரு வாழ்க்கை வட்டச் சடங்குகளும் மக்களை அவர்களுடைய பழைய தகுதி நிலையிலிருந்து பிரித்து, நிலைமாற்றி, புதிய நிலைக்கு அறிமுகம் செய்கின்றன என்றார். யாழ்ப்பாணத்து மக்களிடையேயும் பிறப்பு முதல் இறப்பு வரையாக ஏராளமான வாழ்க்கை வட்டச் சடங்குகள் அவர்களுடைய பண்பாட்டியல் வாழ்வுடன் இணைந்தனவாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு வாழ்க்கை வட்டச் சடங்குகளையும் மக்கள் நேர்த்தியாக நிறைவேற்றிக் கொள்வதில் கவனமாகவும் உள்ளனர். இங்கு நேர்த்திநிலை என்பது சோதிட நம்பிக்கையுடன் இணைந்தது. அந்தவகையில் எந்தவொரு வாழ்க்கைவட்டச் சடங்கும் சோதிட நம்பிக்கையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. எடுத்துக்காட்டாகப் பிள்ளைக்கு முதல் உணவு கொடுத்தல் அதாவது 'பால் பருக்குதல்' அல்லது 'அன்னப்பிரசன்னம்' செய்தல் என்பது ஆண் பிள்ளைகளுக்கு 6வது மாதமும் பெண்பிள்ளைகளுக்கு 5வது மாதமும் செய்யப்படுகின்றன. உண்மையில் இவைபற்றிய விரிவான குறிப்புக்களும் அதற்குரிய நாள் விபரங்களும் யாழ்ப்பாணத்தில் வெளிவரும் வாக்கிய பஞ்சாங்கத்தில் காணப்படுகின்றன.

சோதிடத்தில் இடமும் காலமும் முக்கியமானது. அதாவது கிரகங்கள் எந்த இடத்தில் அல்லது நிலையில் நிற்கின்றன என்பது பல்வேறுபட்ட பிரதிபலிப்புக்களைச் செய்யும் என்பது சோதிடவியலின் அடிப்படை. இவ்வாறே காலமும் மனிதர்களுடைய, இயற்கையி னுடைய இயங்கியல் ஆற்றல்களில் செல்வாக்குச் செலுத்தக் கூடியனவாகும். அந்நதவகையில் 'நல்ல நாள்' பார்த்தல் என்பது எந்தவொரு செயற்பாட்டையும் புதிதாகத் தொடங்குவதற்கு முன்னர்ப் பார்க்கும் வழக்கம் மக்களிடையே பரவலாகக் காணப்படுகின்றது. அதாவது வீட்டுக்கு அத்திவாரம் வெட்டுதல் தொடங்கி வனை வைத்தல், கதவு நிலை நாட்டுதல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளிலும் நல்லநாள் பார்க்கப்பட்டு கட்டப்படும் வீட்டில் முதலாவதாகக் குடியிருக்க ஆரம்பிக்கும்போது நாள், நட்சத்திரம், நேரம் பார்க்கும் வழக்கம் காணப்படுகின்றது. இவ்வாறே திருமணம், பூப்புனித நீராட்டுவிழா போன்றவற்றுக்கும் நல்ல நாள்பார்க்கும் வழக்கம் காணப்படுகின்றது.

ஆரம்பக் காலங்களில் திருமணம் என்பதில் திருமணச் சடங்கே முதன்மையானதாக இருந்துள்ளது. ஆனால் அண்மைக் காலங்களில்

திருமணத்திற்கு முன்னைய பதிவுத் திருமணத்திற்கும் நாள்பார்க்கும் வழக்கம் யாழ்ப்பாணச் சமூகத்தில் காணப்படுகின்றது. இது திருமணத்திற்குப் பார்க்கும் நாளைவிட சற்று நெகிழ்ச்சித் தன்மை யுடையதாகக் காணப்படுகின்றது.

## கிழமை, நட்சத்திரம், திதிதொடர்பான நம்பிக்கைகள்

சோதிடத்தில் காலப்பகுப்பு என்பது முதன்மையானது. ஒரு வருடம் 12 மாதங்களைக் கொண்ட. இப் பன்னிரண்டு மாதங்களில் சில மாதங்கள் (ஆடி, மார்கழி) வாழ்வியல் சடங்குகள் குறிப்பாகத் திருமணம் செய்வதற்குப் பொருத்தமற்றவையாக நம்பப்படுகின்றன. ஒவ்வொரு மாதங்களும் குறைந்தது 30 நாட்கள் கொண்டன. இந்நாட்கள் இரண்டு பிரிவுகளைக் கொண்டவை. ஒன்று வளர்பிறை மற்றையது தேய்பிறை. பொதுவாக வளர்பிறைக் காலங்கள் வாழ்வியல் சடங்குகளுக்கு உகந்தவையாக நம்பப்படுகினறன். இவ் வளர்பிறைக் காலங்கள் 15 திதிகளைக் கொண்டவை அவற்றுள் அட்டமி, நவமி, அமாவாசை போன்றனவும் விலக்கப்படுகின்றன. இதனைவிட ஏழு நாட்களை உள்ளடக்கிய நிலை வாரங்களாகக் கொள்கின்றன. அவற்றுள் செவ்வாய்க் கிழமையும் மக்களால் தவிர்க்கப்படுகின்றன.

மக்கள் தங்களுடைய இறப்புத் தொடர்பான நம்பிக்கையும் சோதிடம் சார்ந்த நிலையில் நோக்கப்படுகின்றது. அதாவது வீட்டில் ஒருவர் 28 நட்சத்திரங்களுள் பஞ்சமி நட்சத்திரங்களான அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரக் காலங்களில் இறந்தால் அது வீட்டுக்குக் கூடாது என்ற நம்பிக்கை காணப்படுகின்றது. இதற்கான பரிகாரங்கள் செய்து இறந்த உடலை எரித்தல் என்பது அவசியம் என்ற வலுவான நம்பிக்கை யாழ்ப்பாணத்து இந்துக்களி டையே காணப்படுகின்றது. மேலும் இறந்தவருடைய திதிக்கு ஆண்டுதோறும் திவசம் கொடுத்தலும், ஆண்டுக்கொருமுறை வரும் சித்திராபூரணை (தாய்), ஆடிஅமாவாசை (தந்தை), மஹாயள பட்சம் (புரட்டாதி மாத அமாவாசைக்கு முன்னுள்ள பதினைந்து நாட்களும்) பிதிர்களுக்குத் தர்ப்பணம் செய்து தானம் கொடுக்கும் வழக்கம் காணப்படுகின்றது.

## நேரம் தொடர்பான நம்பிக்கை

நேரம் என்பது பண்பாட்டியல் தனித்துவமானது. ஒவ்வொரு பண்பாடு நேரத்தினை வகைப்படுத்தி வழக்கப்படுத்திக் கொண்டுள்ளன.

சோதிட மரபுகளில் நேரங்களைக் குறிப்பதற்குத் 'தற்பரை', 'விநாடி', 'நாழிகை' என்பவை பயன்பட்டுள்ளன. 60 தற்பரை ஒரு விநாடி எனவும், 60 விநாடி 1 நாழிகை எனவும், 60 நாழிகை ஒரு நாள் எனவும் காலவாய்ப்பாடு என்பது சோதிடத்தில் காணப்படுகின்றது. மணித்தியாலங்களாகக் கொள்ளும் சர்வதேச மரபுகள் இங்கும் செல்வாக்குப் பெறுகின்றன. ஒவ்வொரு நாளும் 24 மணிநேரங்களை உள்ளடக்கியது. இவ் 24 மணித்தியாலங்களில் இராகுகாலம், எம கண்டம், குளிகன் போன்றவை விலக்கபட்ட காலப்பகுதியுடையனவாகக் கொள்ளப்படுகின்றன. இவையனைத்தினையும் கருத்திற் கொண்டே மக்கள் தங்களுடைய வாழ்வியல் நிலைமாற்றச் சடங்குகள் மற்றும் பிறவற்றினை மேற்கொள்கின்றனர்.

இராகுகாலம் தொடர்பான நம்பிக்கை யாழ்ப்பாண மக்களிடையே முதன்மையான ஒன்றாகக் காணப்படுகின்றது. நல்ல காரியங்களை இராகுகாலத்தில் தொடங்கமாட்டார்கள். வாரத்தில் உள்ள ஏழு நாட்களிலும் இராகுகாலம் குறித்த 1 மணி 30 நிமிடங்களை அண்ணளவாகக் கொண்ட காலப்பகுதியாக அமையும். இது திங்கள் (7. 30 – 9. 00 மு. ப), செவ்வாய் (3. 00 – 4. 30 பி. ப), புதன் (12. 00 – 1. 30 பி. ப), வியாழன் (1. 30 - 3. 00 பி. ப), வெள்ளி (10. 30 - 12. 00 மு. ப), சனி (9. 00 - 10. 30 மு. ப), ஞாயிறு (4. 30 - 6. 00 பி. ப) எனும் அடிப்படையில் காணப்படும் (இவை சற்று வேறுபட்டு அமையும்). இராகுகாலத்தில் நல்ல காரியம் செய்யாத போதும் தெய்வங்களை வழிபடுதலைச் சிறப்பாகக்கொள்வார். குறிப்பாகச் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு போன்ற கிழமைகளில் துர்க்கையை வழிபடுதல் செவ்வாய் தோசம், இராகுதோசம் நிவர்த்திக்குப் பரிகாரமாக மக்கள் கொள்கின்றனர். கடந்த சில தசாப்தகாலங்களாக மேற்குறிப்பட்ட கிழமைகளில் வரும் இராகுகாலத்தில் தேசிப்பழத்தில் நெய்விளக்கு ஏற்றி வழிபடுகின்றனர். பேராசிரியர் சண்முகலிங்கன் அவர்களின் 'துர்க்கையின் புதுமுகம்' தொடர்பான ஆய்வில் இது விரிவாக இருக்கக் காணலாம். இராகுகாலத்தில் கோயில் வழிபாடு செய்தல் முதன்மை பெற்றிருந்தாலும் கோயில் கும்பாபிசேகம், சுவாமி தேருக்கு எழுந்தருளல் போன்ற கருமங்களில் ராகுகாலத்தினைச் சில கோயில்கள் தவிர்ப்பது இங்கு நம் கவனத்திற்குரியது.

ராகுகாலம் தொடர்பான நம்பிக்கை தென்னிந்திய மக்கள் வாழ்வுடன் நோக்கினால் யாழ்ப்பாணத்தில் இதன் தாக்கம் குறைவு

என்றே சொல்லலாம். குறிப்பாகத் தூரதேசப் பிரயாணங்களின் மக்கள் இராகுகாலத்தில் ஆரம்பிக்கமாட்டார்கள். மேலும் எமகண்டத்தில் இறந்த உடலத்தைச் சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லவும் மாட்டார்கள். இவ்வாறே தென்னிந்தியச் சமூகத்தில் அமாவாசை என்பது நல்ல நாளாகவும் அமாவாசைக்கு அடுத்தநாள் 'பாட்டிமை' என்று நல்ல காரியத்திற்கு உகந்ததன்று கருதும் வழக்கமுண்டு. ஆனால் யாழ்ப்பாணத்தில் அவ்வாறில்லை இங்கு அமாவாசையில் நல்ல காரியம் செய்யமுனைய மாட்டார்கள் ஆனால் அடுத்தநாள் வளர்பிறை என்று தொடங்குவார்கள்.

## வருவதுரைத்தல் தொடர்பான நம்பிக்கைகள்

சோதிடவியலின் இயங்கியலில் எதிர்கால நிகழ்வுகள் தொடர்பாகக் கூறல் முதன்மையான தொழிற்பாடாகும். மக்களின் நாளாந்த வாழ்வியலில் ஏற்படும் இடையூறுகளிலில் இருந்து விடுபடுவதற்கு மக்கள் அதிகம் நாடிச் செல்லும் இடங்களில் ஒன்று சோதிட நிலையங்களாகும். யாழ்ப்பாண நகரப் பகுதியினை அண்மித்த பகுதிகளில் இவ்வாறான சோதிட நிலையங்கள் பல உண்டு. அங்கே சோதிடர்கள் சோதிடம் பார்த்துச் சொல்லுதலைத் தங்களுடைய தொழில்வாண்மையாகக் கொண்டுள்ளனர் என்பது இங்குக் கவனிக்கத்தக்கது. அவர்களிடம் காலை, மாலை என்று மக்கள் சென்று தங்களுடைய பிறந்த ஜாதகத்தைக் காட்டிப் பலன் கேட்பார்கள்.

யாழ்ப்பாணச் சமூகத்தில் பிள்ளை பிறந்தவுடன் பிள்ளையின் பிறந்த நேரத்தை அடிப்படையாகக் கொண்டு பிறந்த ஜாதகக் குறிப்பினை எழுதும் வழக்கம் பண்டு தொட்டு இருந்து வருவதினைக் கள ஆய்வின் போது அறியமுடிந்தது. சோதிடர்கள் ஜாதகம் கணித்து கூறுவதில் வல்லவர்களாக உள்ளனர். மேலும் சிலர் பெண்கள் பருவ வயதினை அடைந்த நேரத்தை அடிப்படையாகக் கொண்டு ஜாதகம் கணிக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இது எண்ணிக்கையில் மிகக்குறைவு.

வருவதுரைக்கும் பண்பாட்டியல் நடைமுறை பண்டைத் தமிழர் மரபில் இருந்துள்ளமையினைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. இந்தவகையில் இன்றும் யாழ்ப்பாணத்தில் பிள்ளையின் பிறந்த நேரத்தைக் கொண்டு கணிக்கும் ஜாதகத்தினை அடிப்படையாகக் கொண்டு குறித்த பிள்ளையின் கல்வி, தொழில் வாய்ப்பு, திருமணம், ஆரோக்கியம் போன்ற இன்னோரன்ன வாழ்வியல் விடயங்கள் தொடர்பான எதிர்வுகூறல்களைச் சோதிடர்களிடம் கேட்டறிகின்றனர். சிலவேளைகளில் இடையூறுகள் ஏற்படும் பட்சத்தில் மக்கள்

சோதிடர்களிடம் பரிகாரம் கேட்டுச் செய்வார்கள். கள ஆய்வின் போது யாழ்ப்பாணத்தில் சண்முகலிங்கம் சோதிடர் அவர்களிடம் திருமணம் தடைப்படுவதாகக் கேட்டு வந்த பெண்ணிற்குச் சோதிடர் அவர்கள் அவளுடைய பிறந்த ஜாதகத்தினைப் பரிசோதித்து'நீ அம்மனுக்குச் செவ்வாய்க் கிழமை நெய்விளக்கேற்றி, பூசை பார்த்து வா' என்று நெறிப்படுத்தியிருந்தார். இவ்வாறாக யாழ்ப்பாணத்தில் உள்ள சோதிடர்கள் தங்களிடம் வரும் மக்களிடம் அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஏற்றாற் போல் வியாழக்கிழமை தட்சணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யச் சொல்லுதல், சனிக்கிழமை சனிஸ்வரனுக்கு எள்ளெண்ணெய் எரிக்கச் சொல்லுதல், பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்தல், நேர்த்தி வைத்துப் பொங்கல் செய்தல் போன்ற இன்னோரன்ன பரிகாரங்களைக் கூறுகின்றமையினைத் தொடர்ச்சியான பங்கு பெறும் அவதானத்தின் போது சேகரிக்க முடிந்தது.

சோதிடம் பார்க்கவரும் மக்களிடம் முதலில் சோதிடர் அவர்கள் ஜாதகத்தினை முழுமையாகப் பரிசோதித்துக் கடந்தகால விடயங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுவார். அதன் பின்னரே அவர்களுடைய எதிர்காலம் பற்றிக் கருத்துக் கூறுவார். மக்கள் வாழ்வில் சோதிட நம்பிக்கைகள் மிகவும் செல்வாக்கு மிகுந்தமையினை மேற்படி சோதிடர்களுடனான நேர்காணல்கள் வழியேயும், அவர்களது சோதிட நிலையங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பங்குபற்றும் அவதானத்தின் வழியாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது.

## சமயம்சார் சடங்குகள் பண்டிகைகளையும் திட்டமிடல்

சோதிடங்களின் அடுத்த முதன்மையான தொழிற்பாடுகளில் ஒன்று சடங்குகளின் வழியே மக்களுடைய வாழ்வியலை ஒழுங்கமைத்தல், மீளுயிர்ப்பூட்டல் போன்றன முக்கியமானது. இந்தவகையில் ஆண்டுதோறும் நிகழும் பண்டிகைகள், திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் போன்ற அனைத்தும் சோதிடக் கணிப்பின் வழியே மேற்கொள்ளப்படுகின்றமை இங்குக் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்தில் மக்களால் பிரபல்யமாகக் கொண்டாடப்படும் பண்டிகைகளில் தைப்பொங்கல், சித்திரைப் புதுவருடப் பிறப்பு, தீபாவளி போன்வற்றினைச் சோதிடங்கள் கணித்துக் கூறுகின்றனர். இந்துப் பண்பாட்டில் நிலவுகின்ற சோதிட நாட்காட்டி பொதுவான பயன்பாட்டிலுள்ள ஆங்கிலேயருடைய நாட்காட்டியிலிருந்து வேறுபட்டது. எடுத்துக்காட்டாகச் சூரியனுடைய சுழற்சி வட்டத்தில் 12

கட்டங்கள் வழியாகப் பிரவேசிக்கும் அடிப்படையில் இந்துச் சோதிட நாட்காட்டிகள் தீர்மானிக்கப்படுகின்றன. எனினும் இங்கு வாக்கியம், திருக்கணிதம் எனும் இரண்டு மரபுசார்ந்த சோதிட நாட்காட்டிகள் உண்டு. இவை இரண்டுக்குமிடையில் சிறிய அளவிலான வேறுபாடுகள் உண்டு. ஆனால் சில சமயங்களில் சமய விழாக்களையோ அல்லது பண்டிகைகளையோ தீர்மானிப்பதில் வேறுபாடுகள் நிலவுகின்றமை இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இஸ்லாமியர்களுடைய நாட்காட்டி யாழ்ப்பாணத்து இந்துச் சோதிட நாட்காட்டியிலிருந்து வேறுபட்டது. ஏனெனில் உலகம் பூராகவும் வாழும் இஸ்லாமியர்கள் தங்களுக்குரிய மாதத்தினை அமாவாசைக்கு அடுத்து தோன்றும் முதல் பிறையிலிருந்தே கணித்துக் கொள்கின்றனர். இதனால்தான் இஸ்லாமியர்களுடைய வருடத்தில் 355 நாட்கள் உள்ளன. இஸ்லாமியர்கள் தங்களுடைய பண்டிகைகளைப் பிறையை அடிப்படையாகக் கொண்டு கணிக்கின்றபோதும் யாழ்ப்பாணத்து இந்துச் சோதிட நாட்காட்டிகள் சூரியன் மற்றும் சந்திரனை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. எடுத்துக்காட்டாக, தைப்பொங்கள், சித்திரை வருடப்பிறப்பு போன்றவை சூரியனை அடிப்படையாகக் கொண்டு அமையும் வேளையில் தீபாவளி, நவராத்திரி போன்றன சந்திரனை அடிப்படையாக் கொண்டு அமைகின்றன.

தைப்பொங்கல் விவசாயச் சமூகத்தில் அறுவடையினைத் தொடர்ந்து இடம்பெறும் பண்பாட்டு விழாவாகக் கொண்டாடப் படுகின்றமை இங்குக் குறிப்பிடத்தக்கது. அதேநேரம் சித்திரைப் புதுவருடப்பிறப்பு, தீபாவளி போன்ற பண்டிகைகளும், ஆடிஅமாவாசை, சித்திராபூரணை, மஹாயள பட்சம் போன்றவை மக்களுடைய பிதுர் (முன்னோர்) வழிபாட்டுடன் தொடர்புடைய விரதங்களும், நவராத்திரி, சிவராத்திரி, வரலட்சுமி விரதம், அட்சயதிருதியை, கௌரி நோன்பு, கந்த சட்டி, திருக்கார்த்திகை போன்ற இன்னோரன்ன சமய விரதங்களும் விழாக்களும் மக்களிடையே நிலவிடக் காணலாம். இவற்றுள் அட்சய திருதியை கடந்த தசாப்த காலமாக யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் பெற்றுவரும் ஒன்றாகும். இந்நாட்களில் தங்கம் வாங்குதல் தொடர்பான வலுவான நம்பிக்கை மக்களிடையே காணப்படுகின்றது. இது அம்மன் கோயில்களில் (விஸ்வ கருமா குலத்தினைச் சேர்ந்தவர்களால் பரிபாலனம் செய்யப்படும் வண்ணை காளி கோயில், வண்ணை காமாட்சிஅம்மன் கோவில்களில்) சிறப்பாகச் செய்யப்படுகின்றது. அதே

நேரம் அன்றைய தினம் யாழ்ப்பாணத்து நகரத்தில் உள்ள நகைக்கடைகள் எல்லாம் விழாக் கோலம் பூண்டிருப்பதை நாம் அவதானிக்க முடிந்தது.

## திருமணம் தொடர்பான நம்பிக்கைகள்

அண்மைக்காலமாக யாழ்ப்பாணச் சமூகத்தில் நிலவி வரும் திருமணம் தொடர்பான பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள் அனைத்திற்கும் மக்கள் நாடிச் செல்லும் இடங்களில் சோதிட நிலையங்களும், கோயில்களும் முதன்மை பெறுகின்றன. யாழ்ப் பாணத்தில் கோயில் வீதியில் அமைந்துள்ள சுப்பிரமணிய சாத்திரி வீட்டுக்குக் காலை 9 மணிமுதல் மாலை 3 வரை சென்று களஅவதானம் செய்த போதும், அங்கு வரும் மக்களுடன் கலந்துரையாடிய போதும் பல்வேறு தகவல்களைப் பெறக் கூடியதாக இருந்தது. குறிப்பாக அவர்களிடம் திருமணப் பொருத்தம் பார்க்க வருபவர்களும், பிறந்த ஜாதகம் குறிக்க வருபவர்களும் அதிகம் எனலாம். உண்மையில் அவர்கள் 50 வயது பெண்மணி. ஆனால் அவருடைய தந்தையார் சோதிடம் கூறுவதில் வல்லவராக இருந்தவர். அவரைத் தொடர்ந்து இவர் தற்போது அதனை மேற்கொண்டு வருகின்றார்.

திருமணப் பொருத்தம் பார்க்கும் போது ஆணுக்கோ அல்லது பெண்ணுக்கோ செவ்வாய்க் குற்றம் இருப்பின் செவ்வாய் குற்றம் உள்ள ஜாதகமே பொருந்தும். இதற்கு அவர்கள் தங்கள் செவ்வாய் தோசத்திற்குரிய பொருத்தமான வரன் அமைய செவ்வாய்க்கிழமை துர்க்கை அம்மனுக்கு இராகுகாலத்தில நெய்விளக்கு ஏற்றுகின்றனர். இதனைப் பேராசிரியர் சண்முகலிங்கன் அவர்களின் துர்க்கையின் புதுமுகம் தொடர்பான ஆய்வும் குறிப்பிட்டிருந்தது. கள ஆய்வு நோக்கமாக யாழ்ப்பாணத்தில் உள்ள வண்ணார்பண்ணை சிவன் கோவில், நல்லூர் சிவன் கோவில், திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோவிலுக்குச் செவ்வாய்க்கிழமை வகைமாதிரியாக ஆய்வாளர் சென்ற போது அங்கு விளக்கு ஏற்ற வரும் பெண்களில் 65 வீதமானோர் திருமணத் தடை தொடர்பாகவே கருத்துக் கூறியிருந்தனர். மிகச் சிலர் தங்களுடைய தொழில் கஷ்டம், நண்பர் பகை, ராகு தோசம் போன்றவற்றினைக் கூறியிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் பேச்சுத் திருமணங்கள் பொதுவாகவே ஆண், பெண் இருவருடைய பிறந்த ஜாதகத்திற்கு இடையில் காணப்படும் பொருத்தத்தின் அடிப்படையிலேயே செய்யப்பட்டு வருகின்றமை இங்குக்

குறிப்பிடத்தக்கது. கள ஆய்வின் போது 'முதலில் ஜாதகம் பொருந்தட்டும் மற்றெல்லாம் பிறகு பார்ப்போம்' என்ற ஒரு திருமணத் தரகரின் கூற்று இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கது. இங்குப் 'பிறகு பார்ப்போம்' என்று சொன்னது சீதனம் தொடர்பான விடயத்தையே ஆகும். காதல் திருமணங்களில் திருமணப் பொருத்தம் பார்க்காதுவிடின் அங்கு மரபார்ந்த கொம்புத் தாலி திருமணத்தின் போது கட்டப்படுவதில்லை. மாறாக அம்மன் தாலியே கட்டுகின்றனர்.

அண்மைக்காலமாகத் திருமணம் பொருத்தம் பார்க்கும் மையங்களிலும், விளம்பரங்களிலும் சூரிய-செவ்வாய் தோசம் தொடர்பான கருத்துக்கள் முதன்மையடைந்து வருகின்றன. 32 வயது உடைய பாடசாலைப் பட்டதாரிப் பெண் ஆசிரியருக்குச் சூரிய-செவ்வாய் தோசம் இருப்பதால் அதே தோசமுடைய ஆணைத் தேடுவதாக பெற்றோர் கூறியிருந்தார்கள். ஆனால் இம்மரபு அண்மைக்காலமாக மக்களிடையே மிகவும் பரவலாக காணப்படுவதாகக் கள ஆய்வின் போது சோதிடர் ஒருவர் கூறியிருந்தார். மேலும் திருமணம் ஆகாத ஆண்கள் பெண்கள் ஆகியோருடன் வகைமாதிரியாகக் கலந்துரையாடல் செய்தபோது 'ஒன்றும் சரிவரேல்ல' என்று பதில் கொடுக்கும் தன்மையினை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அதாவது அவர்கள் குறிப்பிடுவதில் பிரதானமானது ஜாதகம் பொருந்தவில்லை என்பதாகும். எனினும் இதனை முழுமையாகப் பொதுமையாக்கம் செய்வதிலும் மட்டுப்பாடுகள் காணப்படுகின்றமையினை இங்குக் குறிப்பிடுதல் அவசியம். அதாவது ஜாதகத்திற்குப் பின்னரான சில விடயங்கள் குறிப்பாகச் சீதனம், தொழில், தனிப்பட்ட விருப்புக்களும் இங்கு இணைத்து நோக்கப்பட வேண்டியுள்ளது.

### அன்றாட சமூக வாழ்வியல் சார் செயற்பாடுகளில்

யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை என்ற நூலில் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் சமூக அசைவியக்கம் பற்றிக் குறிப்பிடும் போது யாழ்ப்பாணத்து மக்கள் தங்களது சமூகநிலை மாற்றத்தில் முதன்மையான கூறாகச் சமஸ்கிருதமயமாக்கலைக் குறிப்பிடுகின்றார். சமூகங்களில் நிலவும் சமஸ்கிருத மயமாக்கல் செயற்பாடுகளில் சோதிட நூல்களின் செல்வாக்குப் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார் (2000: 133-145). யாழ்ப்பாண மக்களிடத்தே 'ஒரு வழிபாட்டிடம் அங்கு நடக்கும் வழிபாடு, வைபவம் ஆகியன பஞ்சாங்கத்தில் இடம்பெறுவதே இவை உயர் நெறியைச் சார்ந்தவை

என்ற மனப்பதிவை ஏற்படுத்தும்' (மேலது: 140). இந்தவகையில் பஞ்சாங்கங்களில் ஆகமரபு சாராத வழிபாட்டு முறைகளைக் கொண்ட கோயில்களின் பெயர்விபரங்கள் இடம்பெறுவதினை மக்கள் உயர்வாகக் கருதும் போக்குநிலை காணப்படுவதாகத் தன்னுடைய நூலில் குறிப்பிட்டிருப்பது தமிழ் மக்களின் சமய வாழ்வியலில் சோதிட நூல்கள் தொடர்பான நம்பிக்கைகள் எவ்வகையான செல்வாக்கினைச் செலுத்துகின்றது என்பது புலப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் மக்கள் பொதுவாக வீட்டுக்கு நிலம் எடுத்தல். வீட்டினை என்ன அளவில் கட்டுதல். சாமியறை எந்தத் திசையில் வாசல் வைத்துக் கட்டுதல். அதற்கேற்றாற்போல் சமையலறையை அமைத்தல். இவ்விரண்டுடன் தொடர்புபட்டவகையில் கிணற்றடியினை அமைத்தல் போன்ற வாழ்விடம் தொடர்பான இன்னோரன்ன விடயங்களைத் தீர்மானிப்பதில் சோதிட சாஸ்திரம் சார்ந்த அறிவுரை மக்கள் வேண்டிநிற்கின்றனர். பொதுவாக வீடுகட்ட விரும்புவோர் உள்ளூர் அரச நிறுவனங்களில் அனுமதி பெறுதல் அவசியம் அதேபோல் அதற்கு முன்னர் மனையடி சாஸ்திரம் தெரிந்த ஒரு சோதிடரின் துணைக்கொண்டு வீட்டின் இடவமைவினைத் தீர்மானிக்கின்ற வழக்கம் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் நல்லூர் செட்டித்தெரு வீதியில் அமைந்துள்ள ஒரு சோதிடர் அவர்களிடம் தங்களுடைய வீட்டினை நிர்மாணிப்பதற்குரிய இடத்தினைத் தெரிவுசெய்துதருமாறு கேட்டுக்கொள்கின்றமையினைக் கள ஆய்வின்போது அறிந்துகொள்ள முடிந்தது. மேலும் யாழ்ப்பாணத்தில் கள ஆய்வின் போது ஒரு பெண்மணி குறிப்பிடும் போது 'என்னுடைய பிள்ளைகளுக்குத் திருமணம் சரிவரவில்லை. சாத்திரியிடம் கேட்டபோது எங்கள் சாமியறை அளவினை மாற்றச் சொல்லிச் சொன்னர். அதன் படி நாங்கள் சாமியறையின் அளவினைக் குறைத்துக் கட்டினோம் அதன் பின் எனது பிள்ளைகளுக்குத் திருமணங்கள் இலகுவாக நடந்தன' எனக் குறிப்பிட்டுள்ளமையான மக்கள் வாழ்வியல் சோதிட நம்பிக்கையின் செல்வாக்கினை காட்டிநிற்கின்றது.

மக்களின் சமூக. பொருளாதார. சமய வாழ்வியல் நடைமுறைகள் அனைத்திலும் சோதிட நம்பிக்கையின் செல்வாக்கானது நிறைந்து காணப்படுவதினை மேற்கண்டகளாய்வு அனுவங்களின் வழியாக அறிந்துகொள்ள முடிகின்றது.

## தொகுப்பு

யாழ்ப்பாண மக்களது நம்பிக்கைகளையும் வாழ்வியல் நடைமுறைகளையும் புரிந்து கொள்வதற்கு இங்கு நிலவிவரும் சோதிட நம்பிக்கைகள் பற்றிய ஆய்வுகள் துணைபுரிகின்றன. யாழ்ப்பாண மக்களது அன்றாட வாழ்விலும் சரி சமூக நிலைமாற்ற வாழ்விலும் சரி சோதிட நம்பிக்கைகளும், அதுசார்ந்த பண்பாட்டுப் பயில்வுகளும் முதன்மையான இடத்தினைப் பெறுகின்றமை இவ்வாய்வின் வழியே அறிந்துகொள்ள முடிகின்றது. அண்மையில் நடந்த காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளின் போது (2015) மக்களில் சிலர் சாட்சியம் கொடுக்கும் போது 'எங்களுடைய பிள்ளைகளின் ஜாதகத்தில் சொல்லுது என்ர பிள்ளை எங்கோ இருக்கின்றான்÷ அவன் சாகவில்லை' என்று கூறியிருந்தமை தொடர்பாக வெளிவந்துள்ள பத்திரிகைக் குறிப்புக்கள் கூட மக்களுடைய வாழ்வியல் நம்பிக்கை களின் அடிநாதமாகச் சோதிட நம்பிக்கை காணப்படுகின்றமை தெளிவுறுகின்றது.

ஆரம்பக் காலங்களில் சோதிடர்களும் சோதிடம் பார்க்கும் வழக்கமும் மரபார்ந்த உள சீர்மையச் செயற்பாடுகளாக இருந்து வந்துள்ளன. மக்கள் சோதிடர்களிடம் செல்லும் போது அவர்கள் குறிப்பிட்ட நபரின் ஜாதகத்தினை நுணுக்கமாக ஆராய்ந்து, கணிப்புக்கள் மேற்கொண்டு குறித்த ஜாதகரின் கடந்த கால வாழ்வியல் அனுபவங்களைக் குறிப்பிடுவார்கள். இவைகள் சரியாக அமையும் பட்சத்திலேயே தொடர்ந்து கூறுவார்கள். இவ்வாறு கூறும்போது மக்களுக்கும் சோதிடருக்குமிடையிலான சமூக இடைவெளி குறைவடைந்து நெருக்கமுறும். அவ்வேளையில் தங்களுடைய பிரச்சினைகளை இலகுவாகக் கலந்துரையாட ஒரு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இது இயல்பாக ஒரு உளச் சீர்மையச் செயற்பாட்டுக்கு இட்டுச் செல்கின்றது.

சோதிடங்களும் அதுசார்ந்த நம்பிக்கைளும் மக்களுக்குத் தன்னம்பிக்கையை மட்டுமன்றி வாழ்வினைத் திட்டமிட்டு ஒழுங்குமுறைப் படுத்திக்கொள்ளவும் உதவுகின்றமையினை மேற்குறித்த தரவுப் பகுப்பாய்வுகளின் வழியாக அறிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. அதாவது மக்கள் பருவங்களுக்கு ஏற்பப் பண்டிகைகளயும் விழாக்களையும் ஒழுங்கமைத்துக் கொள்ளவும்.

அதற்கேற்பத் தொழில்படவும் வகைசெய்கின்றன. குறிப்பாகப் புதுவருடப்பிறப்பின் பின்னரான கைவிசேடம் பற்றிய நம்பிக்கை மக்களிடையே கூட்டுணர்வினை ஏற்படுத்துவற்கு வழிவகை செய்கின்றது.

இந்நிலையில் தொகுத்து நோக்கினால் சோதிட நம்பிக்கையானது யாழ்ப்பாணத்தில் மக்களின் வாழ்வியல் நடைமுறைகளில் மிகவும் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒன்றாகக் காலந்தோறும் இருந்து வருகின்றது. இது ஒரு யாழ்ப்பாணப் பண்பாட்டு மரபின் வடிவமாகப் பிரபல்யம் அடைந்துள்ளது.

### உசாத் துணைநூல்கள்

இரகுநாதையர். 1942. செகராசசேகரமாலை (மூலமும் உரையும்). யாழ்ப்பாணம்: சோதிடப் பிரகாச யந்திரசாலை.

மகாலட்சுமி, தி. 2010. *இலக்கியத்தில் சோதிடம்.* சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

பக்தவத்சல பாரதி. 2014. *இலக்கியத்தில் மானிடவியல்.* புத்தாநத்தம்: அடையாளம்.

சண்முகலிங்கம். என். 2014. *துர்க்கையின் புதுமுகம்* (தமிழில்: பக்தவத்சல பாரதி). சென்னை: சந்தியா பதிப்பகம்.

சிவத்தம்பி. கா. 2000. *யாழ்ப்பாணம்: சமூகம். பண்பாடு. கருத்துநிலை.* சென்னை– கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

Bauer, Martin and John Durant. 1997. Belief in Astrology : a social-psychological analysis. *Culture and Cosmos: A journal for history of astrology and cultural astonomy* Vol. 1, 1: 55-71. access from http://www. cultureandcosmos. org/issues/vol1. php 28. 07. 2017

Kelly, Ivan W. 1997. The Concepts of Modern Astrology: A Critique. *Psychological Reports*, 81, 1035-1066.

Krishnamurti. K. S. 1987. Reader No II. Fundemental Principles of Astrology Madras: Krishnamurti Publications.

LEWIS, JAMES R. 2003. *The Astrology Book The Encyclopedia of Heavenly Influences.* Canton: Visible Ink Press.

Perinbanayagam, R. S. 1982. *The Karmic Theater: Self, Society and Astrology in Jaffna.* Amherst: The University of Massachusetts Press.